திலே உள்ள கந்தர்வகோட்டையிலிருந்து, புதுக்கோட்டையிலுள்ள எல்லாப் பகுதிக்கும் சரியான முறையில் இந்த மின்சார வசதி விஸ்தரிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே பார்த்தார்கள். இதைப்பற்றியே நாங்கள் சென்ற ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் சொன்னதைப் பார்த்தால் தெரியும். ஆனால் மக்கள் அரசாங்கத்தைக் குறை கூறவில்லை. அரசாங்கம் செய்கின்ற வேலைகளுக்காக அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். எதிர்க் கட்சியினர் கூறுவதைப்போல் அல்ல. இரவு மூன்று மணி வரையிலும் காத்திருந்து எங்களுக்கு இன்னும் அனேக நன்மைகளைச் செய்யவேண்டுமென்று கேட்கிறார் கள். அவர்கள் கேட்பது என்னவென்றால், "எங்களுக்கு ஏரிகள் மராமத்து செய்ய இல்லை. நாட்டாறுகளில் அணை கட்ட இல்லை. இருக்கின்ற கிணறுகளிலுள்ள தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயம் செய்வதற்காவது மின்சார வசதி செய்து கொடுங்கள்" என்றுதான் கேட்கிறார்கள். நமது காருண்யமுள்ள அரசாங்கம் இதைக் கூடிய சிக்கிரத்தில் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக . . . .

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m., on Monday, the 6th March 1961.

The House then adjourned.

V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and orders.

172. *Notification issued with G.O. Ms. No.* 1980, **Public** *(General-M), dated* 14*th December* 1960, *regarding the introduction of Tamil in Government Offices up to District level.* (*Laid on the table of the House under section* 6 *of the Madras Official Language Act*, 1956 (*Madras Act XXXIX of* 1956).

B.—Reports, Notifications and other papers.

Nil

TRUTH ALONE TRIUMPHS